ருவன்வெல்ல பிரதேச சபை - 2023

-------------------------------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ருவன்வெல்ல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தும் தகவல்களின் பொழிப்புடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ருவன்வெல்ல பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்ல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்

மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்குளை சமர்ப்பிப்பதன் முறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வரவு மற்றும் செலவு ரூபா 5,076,258 ஆக அங்கீகரித்த ஜர்னல் குறிப்பு பேரேட்டிற்கு வரவு ரூபா 4,301,258 தொகை மற்றும் செலவு ரூபா 430,258 தொகையாக பிரதியிடப்பட்டு இருந்தன. | இது இடம்பெற்ற தவரொன்றாகும். ஜர்னல் குறிப்பை சரிசெய்வதென. | கணக்குகளை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | ரூபா 4,293,630 ஆன ஜர்னல் குறிப்பிற்கு அங்கீகாரம் காணப்படவில்லை. | தவரொன்றாகும். சரி செய்யப்பட்டதென. | - மேற்படி - |

#### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத் தொகை ரூபா 10,520,274 ஆன காணி மற்றும் கட்டிடங்கள், ஆயர்வேத மருந்துகள் மற்றும் தளபாடங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டில் சரி செய்வதென. | கணக்கை சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | 2023 ஆண்டில் கிடைத்த 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளிற்கு உரிய ரூபா 7,170,728 ஆன உள்ளூராட்சி உதவி கடன்படுனர் பெறுவனவு, திரண்ட நிதிய மிகை மற்றும் பற்றாக்குறை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2020 ஆண்டில் கணக்காய்வுக் கட்டணம் செலுத்தப்பட்டு இருந்த போதும், அதற்காக ரூபா 200,000 ஆன ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, 2023 | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்கு கணக்காய்வு கட்டணம் ஒதுக்கப்பட்டு இருக்கவில்லை. | | |
| (ஈ) | 2022 ஆண்டிற்குரிய ரூபா 365,010 ஆன செலவு 2023 ஆண்டில் செலுத்தியதால் ஆண்டின் செலவு அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | கணக்கு விடயங்கள் 12 இல் காணப்பட்ட ரூபா 2,267,244 ஆன மீதி, அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டு இருந்தது. | கோள்கை மற்றும் தீர்மானமெடுக்கும் குழு தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொண்டதென. | முறையான அங்கீகாரத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | முறையான அங்கீகாரம் இன்றி 02 கணக்கு விடயங்களில் ரூபா 4,130,000 ஆன ஆரம்ப மீதிகளை சரி செய்ய ஜர்னல் குறிப்பு இடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | - மேற்படி - |

**1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்கு விடயங்கள் 03 இற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் பிரகார மற்றும் துணை அறிக்கைகள் பிரகாரம் மீதிகளிற்கு இடையில் ரூபா 11,563,234 ஆன வித்தியாசம் நிலவியது. | 2024 ஆண்டில் சரிசெய்கிறேன். | மீதியை சரி செய்ய கொள்ள வேண்டும். |
| (ஆ) | கணக்கு விடயங்கள் 07 இல் 2023 திசெம்பர் 31 திகதிக்கு நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதி மற்றும் பண்டக கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் அம் மீதிகளிற்கு இடையில் ரூபா 921,918 ஆன வித்தியாசம் நிலவியது. | வித்தியாசத்தை கண்டறிந்து சரி செய்வதென. | - மேற்படி - |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159 (1) பிரிவு | ஆண்டு 2001 - 2015 இடையிலான காலத்தினுள் டெண்டர் செய்த இறைச்சி, மீன் கடை மற்றும் பொது மலசலகூடத்தின் நிலுவை ரூபா 201,809 தொகையை பொறுப்பு வாய்ந்த அலுவலர்களிடமிருந்து | தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஆண்டிறுதியில் ஓரளவையேனும் பூர்த்தி செய்ய | சட்டத்தின் பிரகாரம் நடடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறிவிடுமாறு உள்ளூராட்சி ஆணையாளரினால் அறிவித்திருந்த போதும், அவ்வாறு அறவிட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பதென. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>--------------------------------- | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371 (2) | 10 நிமித்த கட்டுநிதிகள் குறித்த பணிகள் முடிடிவடைந்த பின்னர் தீர்க்க தாமதித்த காலம் 07 நாட்கள் மற்றும் 04 மாதங்களிற்கு இடையிலான வீச்சளவை கொண்டிருந்தது. | இது தொடர்பாக குறித்த ஆளணியினரை அறிவூட்டியுள்ளதென . | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 (3) | 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 643,548 ஆன வைப்புக்கள் தீர்க்கப்பட்டு இருக்காததுடன் பொது சந்தை முற்பண செலுத்தல் (Key money) ரூபா 3,539,450 தொகையை வருமானத்திற்கு எடுக்காது 02 ஆண்டுகளிற்கும் 10 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 02 ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | மேற்படி |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடள் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,108,248 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,203,932 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்ட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான வகை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 8,377,360 | 8,375,042 | 5,198,885 | 2,758,399 | 5,990,289 | 8,467,619 | 9,165,795 | 4,586,367 |
| வாடகை | 30,164,250 | 22,826,395 | 21,541,467 | 2,812,726 | 18,738,663 | 21,300,685 | 24,054,670 | 6,847,788 |
| அனுமதிப்பத் திர கட்டணம் | 775,050 | 775,050 | 809,925 | - | 695,050 | 691,225 | 633,000 | - |
| ஏனைய வருமானம் | 17,140,000 | 17,140,000 | 19,422,422 | 2,773,554 | 3,219,578 | 13,788,054 | 8,877,358 | 8,979,131 |
| | 56,456,660 | 49,116,487 | 46,972,699 | 8,344,678 | 28,643,580 | 44,247,583 | 42,730,823 | 20,413,286 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி, ஏக்கர் வரி, வாடகை மற்றும் ஏனைய வருமானங்களில் இருந்து 2023 திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டிய மீதி ரூபா 13,259,833 ஆனதுடன் அம் மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 5,338,925 ஆன மீதி நிலவியது. | நிலுவையை அறவிட தேவையான சட்ட நடவடிக்கை மற்றும் திட்டம் தயாரிக்கப்பட்டு உள்ளதென. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (ஆ) | 2018 மற்றும் 2022 ஆண்டுகளிற்கு உரியதாக 05 கடையறைகளில் இருந்து மற்றும் ரூபா 592,440 தொகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | 03 கடையறைகளில் இருந்து பணம் செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய கடையறைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |
| (இ) | 2021,2022 மற்றும் 2023 ஆண்டுகளில் நிலுவையான அறிவித்தல் பலகை வருமானம் ரூபா 234,200 ஆனது. நிலுவை அறிவித்தல் பலகை கட்டணம் ஆண்டுதோறும் முன்கொண்டு வரப்பட்டிருக்காததால் நிலுவை தொகையை சரியாக இனங்காண முடியாதிருந்தது. | தற்போது சரி செய்துள்ளதென. | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக கிடைத்த 44 முறைப்பாடுகள் பின்னூட்டல் செய்யப்பட்டு இருக்காததுடன் அந்த நிர்மாணங்களிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருதெனவும் அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றும் போது பிரச்சினைகள் ஏற்படாததால் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லையென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தல் பிரகாரம் உரிய அங்கீகாரமின்றி 1459 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்ததுடன் அவை எதுவும் இன்வென்றியிற்கு உட்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | பதில் கிடைக்கவில்லை. | அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | டென்டர் கோரிய போதும், 03 இறைச்சிக் கடைகள், ஒரு காணித் துண்டு மற்றும் பொது மலசலகூடமொன்றை 2023 ஆண்டினுள் குத்தகை வழங்க முடியாததால் ரூபா 2,121,140 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | பல குறைபாடுகள் காரணமாக டென்டர் செயற்படுத்தப்படவில்லை என. | வருமானத்தை தாமதமின்றி திரட்ட வேண்டும். |
| (ஈ) | குத்தகை வழங்கிய ஆதனங்களில் இருந்து காலரீதியான வாடகை அறவிடப்படாததால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளிற்காக ரூபா 1,590,906 தொகையை செலுத்த வேண்டிய ஏற்பட்டிருந்தது. | குறித்த அலுவலர்களிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நட்டத்தை தாமதமின்றி தீர்த்துக் கொள்ள வேண்டும் |
| (உ) | 36 கடையறைகளிற்காக 2023 ஆண்டிற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இருக்கவில்லை. | பதில் கிடைக்கவில்லை. | உடன்படிக்கை கைச்சாத்திட்டு வருமானம் ஈட்ட வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2002 ஆண்டு முதல் 2021 வரையான காலம் பழைய ரூபா 365,161 ஆன கடன் மீதி 06 அலுவலர்களிடமிருந்து அறவிடப்படாது காணப்பட்டது. | இந்த கடனை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் மீதியை தாமதமின்றி அறவிட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை வருமானத்திற்கு எடுக்க வேண்டிய ரூபா 134,138 தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வருமானம் உரியவாறு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | உரிமை தீர்க்கப்படாத மற்றும் அளவு தெரியாக காணியொன்றில் வனப் பயிர்ச் செய்கைக்கு பொதுச் சபை தீர்மானமொன்றை எடுத்திருந்தது. | சபைக்கு சொந்தமானதென உறுதி செய்து கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.. | சொத்துக்களின் உரிமையை தீர்த்துக் கொள்ள வேண்டும். |